**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 81 அ பந்தியின் பிரகாரம் தனியாக ஆண்டிற்கான வரிக்குப் பின்னரான இலாபம் அல்லது நட்டம் காட்டப்பட்டவாறு விரிவான | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை | நியம ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | வருமானக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்படும். | வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் 61 அ பந்தியின் பிரகாரம் ஏனைய விரிவான வருமானம் தொடர்பான உருப்படிகள் தொடர்பாக இனங்காணப்பட்ட பிற்போடப்பட்ட வரி பெறுமதி ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் காட்டப்பட வேண்டும். எனினும் ரூபா 54,947,608 தொகையான மீளாய்வாண்டுக்கான உண்மையான இலாபத்தில் இனங்காணப்பட்டிருந்த ரூபா 13,187,426 தொகையான பிற்போடப்பட்ட வரி ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியம ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிற்போடப்பட்ட வரியைக் கணிப்பிடும் போது 28 சதவீத வரி விகிதத்தைப் பயன்படுத்திய பின்னர் 2021 ஆம் ஆண்டிற்கான பிற்போடப்பட்ட வரித் தொகை ரூபா 187,736,667 ஆக காணப்பட வேண்டியதுடன் ரூபா 72,000 இனங்காணப்படாத பிற்போடப்பட்ட வரிக்காக சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் இது நிதிக்கூற்றுக்களில் ரூபா 219,110,112 ஆக இனங்காணப்பட்டிருந்தது. இதன் விளைவாக, இறுதி பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பின் தேறிய பெறுமதி ரூபா 31,373,445 ஆல் அதிகரித்து மதிப்பிடப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான வரி விகிதங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான மென்பொருளின் காலக்கழிவு ரூபா 3,496,361 ஆக காணப்பட்ட போதிலும் இது நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,382,527 ஆக காட்டப்பட்டிருந்தது.. இதன் விளைவாக ஆண்டுக்கான இலாபம் ரூபா 886,166 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மென்பொருளின் காலக்கழிவு சரியாக கணிப்பிடப்பட வேண்டும். |
| (இ) | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தவணை கடந்த | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | சரியான தொகைகள் காட்டப்பட |

| | | | |
|---|---|---|---|
| | வரி அறவீட்டு பிரிவின் பதிவேடுகள் மற்றும் வரி செலுத்துவதற்கான கூட்டுத்தாபனத்தின் கணக்குகளின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வரிப் பொறுப்பு ரூபா 230,199,525 (தண்டப்பணமின்றி) ஆக காணப்பட்ட போதிலும் அது நிதி நிலைமைக் கூற்றில் நிதியல்லாத பொறுப்புக்களின் கீழ் ரூபா 137,473,990 ஆக காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக, நிலுவையாகவுள்ள செலுத்த வேண்டிய வருமான வரி தொகை ரூபா 92,725,535 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | வேண்டும். |
| (ஈ) | ஒலிபரப்பு நிலையத்தை நடாத்துவதற்கு குத்தகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த 0.3194 ஹெக்டெயர் பரப்பளவிலான இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணி தொடர்பில் சட்டமா அதிபரால் அங்கீகரிக்கப்பட்ட முறைமையின் பிரகாரம் 1995 ஆம் ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா 10,969,208 தொகையான குத்தகை வாடகை கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | செலவினங்கள் சரியாகக் கணக்குகளிற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தொகை | துணை ஏடுகளின் பிரகாரம் தொகை | வேறுபாடு | முகாமைத்தவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | பெற வேண்டிய வைப்புக்கள் | 9,707,462 | 9,287,782 | 419,680 | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகள் துணை ஏடுகளுடன் சமப்படுதல் வேண்டும். |
| (ஆ) | வான்கால கடன்பட்டோர் | 291,123,491 | 289,389,368 | 1,734,123 | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். நிதிக்கூற்றுக்களில் சரியாக சமர்ப்பிப்பதற்கு | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகள் துணை ஏடுகளுடன் சமப்படுதல் வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | வான்கால கடன்கொடுத்தோர் | 13,179,619 | 15,568,759 | 2,389,140 | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். நிதிக்கூற்றுக்களில் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகள் துணை ஏடுகளுடன் சமப்படுதல் வேண்டும். |

**1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை**

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | காணிகள் | 7,574,763 | உரித்துறுதிகள், பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள், நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகள் | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | சொத்துக்களின் உரிமைத்துவம் மற்றும் இருக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கட்டிடங்கள் | 431,223,877 | நிலையான சொத்துக்கள் பதிவேடு, பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் மற்றும் பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகள் | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | சொத்துக்களின் உரிமைத்துவம் மற்றும் இருக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | லங்கா புவத்தின் பங்குகளில் முதலீடு | 1,000,000 | பங்குச் சான்றிதழ்கள் | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இந்திய அரச வங்கி கணக்கு | 449,874 | மீதி உறுதிப்படுத்தல்கள் | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (உ) | மெட்ராஸ் கணக்கு - BOC | 1,842,540 | மீதி உறுதிப்படுத்தல்கள் | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | சொத்துக்களின் உரிமைத்துவம் மற்றும் இருக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | செலவினம் | 110,104,761 | அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் | இந்த உறுதிச்சீட்டுக்கள் பரீட்சிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும். | அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் செலவினங்களை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 செலுத்த வேண்டிய மற்றும் பெறவேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான வான்கால கடன்பட்டோர் ரூபா 291,123,491 ஆக காணப்பட்டது. அதில் ரூபா 99,766,903 தொகை பொது நிறுவனங்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளதுடன் ரூபா 191,356,588 தொகை தனியார் நிறுவனங்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளது, அதே நேரம் அந்த நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 30,961,343 தொகை இரண்டு பொது நிறுவனங்களின் கடன்பட்டோர் மீதிகளால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | நிதிக்கூற்றுக்களில் சரியான தொகைகள் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | 2 முதல் 10 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதிக்குரிய ரூபா 12,006,507 தொகையான ஏனைய வருமானத்தின் 7 பெறவேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | பெறவேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2 முதல் 20 வருடங்கள் வரையான காலத்திற்கு முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 6,784,292 மீதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 16,755,303 தொகையான நானாவித கடன்பட்டோர் மீதியில் | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | பெறவேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும், மீளாய்வாண்டிலும் குறித்த மீதி அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1981 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியுடன் தொடர்புடைய ரூபா 149,420,035 கூட்டுமொத்த தொகை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு செலுத்த வேண்டியதாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவறான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. குறித்த தொகையானது 40 வருடங்களாகத் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காததுடன் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் குறித்த மீதி ரூபா 145,162,769 ஆக காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | நீண்டகாலமாக செலுத்த வேண்டிய மீதிகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றைச் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 9.1 ஆல் திருத்தப்பட்ட நி.பி. 371 (2) (ஆ) மற்றும் 371 (5) இன் பிரகாரம் பதவிநிலை தரத்திலுள்ள உத்தியோகத்தர்களால் மாத்திரமே ரூபா 100,000 தொகையான ஆகக் கூடிய எல்லை வரை செயல்நிமித்த கட்டுநிதிகளை பெற்றுக்கொள்ள முடியும். எனினும் குறித்த எல்லையை மீறி 21 சந்தர்ப்பங்களில் ரூபா 5,850,889 தொகையான முற்பணங்கள் வழங்கப்பட்டுள்ளது. | இந்த முற்பணங்கள் சேவை தேவைப்பாட்டின் அடிப்படையில் வழங்கப்பட்டன. | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் S.L.B.C/3142 ஆம் இலக்க பதவியணியினர் அறிவித்தலின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் முன்னைய முற்பணம் தீர்ப்பனவு செய்யப்படுவதற்கு முன்னர் முற்பணங்கள் | இந்த முற்பணங்கள் விசேட அங்கீகாரத்தின் மீது கடமையின் அவசியத் தன்மையின் அடிப்படையில் வழங்கப்பட்ட போதிலும் அந்த முற்பணங்களை முறையாகத் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | கூட்டுத்தாபனத்தின் எழுத்துமூல அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

வழங்கப்படக்கூடாது. எனினும் இந்தத் தேவைப்பாட்டிற்கு முரணாக மீளாய்வாண்டில் 68 சந்தர்ப்பங்களில் 18 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,674,595 தொகை கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்டுள்ளது.

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 396 (ஈ)(i) மற்றும் (iii) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செல்லுபடியாகும் காலப்பகுதியை 06 மாதங்களால் விஞ்சியிருந்த ரூபா 2,624,539 பெறுமதியான 37 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 396 இன் கீழ் அந்த காசோலைகளை இரத்து செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி 01/2015 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை | உத்தியோகபூர்வ வாகனத்திற்கு உரித்துள்ள உத்தியோகத்தர் ஒருவர் குறித்த உத்தியோகபூர்வ வாகனத்தை அல்லது குறித்த பதவிக்கு உரித்துள்ள ரூபா 50,000 மாதாந்த போக்குவரத்து படி மற்றும் மாதாந்த எரிபொருள் படியை பெற்றுக்கொள்ளலாம். எனினும் தலைவருக்கு மோட்டார் வாகனம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் மூன்று மாதங்களுக்கான மாதாந்த போக்குவரத்து படி மற்றும் எரிபொருள் படியாக ரூபா 173,453 தொகை முன்னாள் தலைவருக்கு வழங்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் முதல் 2021 நவம்பர் வரை கூட்டுத்தாபனத்தின் பிரதான நடைமுறைக் கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,304,086 தொகையான நேரடி செலவு மாற்றங்கள் மற்றும் ரூபா 5,623,574 தொகையான இறுவெட்டுக்களின் விற்பனை தொடர்பான நேரடி செலவு மாற்றங்கள் மற்றும் ரூபா 2,946,840 தொகையான நேரடி வரவு என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். 2022 ஆகஸ்ட் மாத இறுதியளில் பிரதான கணக்கு மற்றும் இறுவெட்டுக்களின் விற்பனைக்காகப் பயன்படுத்தப்படும் கணக்கின் நேரடி செலவுகளை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நேரடி செலவுகள் இனங்காணப்பட்டு பேரேடுகளில் பதிவுசெய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 9,286,276 இலாபமொன்றாக (வரிக்கு முன்னரான) இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,306,987 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 11,593,263 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. வான்கால விற்பனை வருமானம் ரூபா 85,675,755 ஆல் அதிகரித்தமை மற்றும் நிர்வாகச் செலவினங்கள் ரூபா 45,875,198 ஆல் குறைவடைந்தமை என்பன இந்த அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கம் செலுத்தியிருந்தன.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டிற்கான விற்பனை வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 85,675,755 ஆல் அதிகரித்திருந்ததுடன் நிர்வாகம், விநியோகம் மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள் ரூபா 45,774,799 ஆல் குறைவடைந்திருந்தன. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வரிக்குப் பின்னரான இலாபம் ரூபா 23,023,942 ஆல் அதிகரித்திருந்தது. அரசாங்க மானியம் 21.6 ஆல் அதாவது ரூபா 95,000,000 ஆல் குறைவடைந்திருந்த போதிலும், செயற்பாட்டு நட்டம் ரூபா 331,610,120 (அரசாங்க மானியம் இன்றி) ஆக மேலும் அறிக்கையிடப்பட்டிருந்தது. ஆகையால் திறைசேரியின் நிதி உதவியோ அல்லது அரசாங்கத்தின் வேறு எந்த நிதியுதவியோ இன்றி கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குதலானது நிச்சயமற்ற தன்மையொன்றாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நடைமுறை விகிதத்திலும் விரைவு விகிதத்திலும் சிறிய வேறுபாடொன்று அவதானிக்கப்பட்ட போதிலும் 2 ஆண்டுகள் முதல் 47 ஆண்டுகள் வரை முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 53,733,604 தொகையான உள்ளூர் கடன்பட்டோர் மீதி மற்றும் ரூபா 66,520,620 தொகையான வெளிநாட்டு கடன்பட்டோர் மீதி என்பன நடைமுறை சொத்துக்களின் கீழ் கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செயற்பாட்டு இலாப விகிதம் 80.5 இலிருந்து 52.57 வரை அதிகரித்திருந்ததுடன் விற்பனை வருமான அதிகரிப்பு மற்றும் நிர்வாகச் செலவினங்கள் மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவினங்களின் வீழ்ச்சி என்பன இந்த அதிகரிப்பிற்கு தாக்கம் செலுத்தியிருந்தன. எனினும் செயற்பாட்டு நட்டம் ஏற்பட்டதன் காரணமாக செயற்பாட்டு மற்றும் ஏனைய செலவினங்களிற்கான நிதியேற்பாடுகளாக ரூபா 345,000,000 தொகை திறைசேரியிடமிருந்து பெறப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 யூன் முதல் உரித்துள்ள ரூபா 93,020 மாதாந்த சம்பளத்திற்கு பதிலாக ரூபா 120,020 மாதாந்த சம்பளம் முறையான அங்கீகாரமின்றி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகத்தால் பெறப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டில் ரூபா 603,900 தொகை சம்பளம் மற்றும் சம்பள நிலுவைகளாக செலுத்தப்பட்டுள்ளது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். இது தொடர்பாக சுதந்திரமான விசாரணையொன்றை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | மேலதிகக் கொடுப்பனவை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வெகுசன ஊடக அமைச்சினால் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் ரூபா 1,000,000 தொகை பங்கு மூலதனத்தை கொள்வனவு செய்வதற்காக 1993 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தால் முதலீடு செய்யப்பட்டது. எனினும், 1993 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை பங்கிலாப வருமானம் எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | முதலீடுகளின் நிலைமையை சரிபார்த்து நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கூட்டுத்தாபனத்தின் ஸ்ரூடியோ 6 மற்றும் ஸ்ரூடியோ 10 இல் உள்ள மூன்று பியானோக்கள் அரசாங்க பெறுகை வழிகாட்டல் 2006 ஐப் பின்பற்றாமல் பழுதுபார்க்கப்பட்டிருந்தன. மேலும் இந்த நடவடிக்கை 2020 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. ஸ்ரூடியோ இல. 06 இல் உள்ள பியானோவை பழுதுபார்ப்பதற்காக ரூபா 460,000 தொகை செலுத்தப்பட்டுள்ளதுடன் ஸ்ரூடியோ இல. 10 இல் உள்ள இரண்டு பியானோக்கள் பழுதுபார்ப்பதற்காக கூட்டுத்தாபனத்திலிருந்து வெளியில் கொண்டு செல்லப்பட்டன. எனினும் 2021 மே 21 இல் குறித்த பியானோக்கள் மீண்டும் கூட்டுத்தாபன வளாகத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்த போதிலும் 2022 ஆகஸ்ட் 16 வரையிலும் கொடுப்பனவு கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. வரலாற்று மதிப்பைப் பாதுகாப்பதற்காக பியானோக்களை பழுதுபார்ப்பதற்கு முன்னர் கூட்டுத்தாபனம் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. பொறியியல் பிரிவினரின் விழிப்புணர்வுடன் குறித்த பணி மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. | அரசாங்க பெறுகை வழிகாட்டல்களை பின்பற்றி, பொதுச் சொத்துகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

பின்பற்றிய முறைமை மற்றும் கூட்டுத்தாபன வளாகத்தினுள் பழுதுபார்க்கும் பணியை நம்பிக்கைப்பொறுப்பு மேற்கொள்கிறது. எனினும், இந்த மூன்று பியானோக்களும் கூட்டுத்தாபன தலைவரின் நேரடித் தலையீட்டின் பேரில் கூட்டுத்தாபனத்திற்கு வெளியே கொண்டுவரப்பட்டிருந்தன. மேலும், பியானோக்கள் பொருளிருப்பிற்கு எடுக்கப்பட்ட போது அடையாள நோக்கத்திற்காக விசேட இலக்கங்கள் அல்லது குறிகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஆகையால் கூட்டுத்தாபனத்தில் இருந்து வெளியே கொண்டு வரப்பட்ட அதே 3 பியானோக்களும் கூட்டுத்தாபனத்திற்கு சரியாக திரும்பப் பெறப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு எந்தவொரு சான்றாதாரமும் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமானதாக காணப்படவில்லை.

## 3.4 ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கூட்டுத்தாபனத்தின் சேவையில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது கூட்டுத்தாபனத்தின் சேவையில் இணைக்கப்பட்டுள்ள ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 520,995 தொகையை கூட்டுத்தாபனம் அறவிட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2009 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,757,890 தொகையை அறவீடு செய்வதற்கு 2022 ஆகஸ்ட் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டு, மீண்டும் கூட்டுத்தாபனத்தின் சேவைக்கு அறிக்கையிட்டிருந்த உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 1,899,146 தொகை மற்றும் 2021 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற உத்தியோகத்தரிடமிருந்து பெற | சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அத்தகைய அறவீடுகளைக் கோரி கடிதங்கள் அனுப்பப்பட்டன. | பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வேண்டிய ரூபா 118,983 தொகை என்பன குறித்த தொகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் 41 பதவிகளில் 271 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலையிலுள்ள 34 பதவிகளில் முறையே 60, 57 மற்றும் 67 உத்தியோகத்தர்கள் மிகையாக உள்ளனர். | தற்போது கூட்டுத்தாபனத்தின் பழைய ஊழியர்களுக்கு பழைய தரப்படுத்தல் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. 2019.06.07 ஆம் திகதிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணி ஏற்பாடுகளின் அடிப்படையில் புதிய ஆட்சேர்ப்புகளை அமுல்ப்படுத்துவதற்கு முன்னரும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையை அமுல்ப்படுத்துவதற்கு முன்னரும் மேற்படி பழைய ஆட்சேர்ப்புக்கள் பழைய தரப்படுத்தலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதால் இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை மற்றும் ஆரம்ப நிலைகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் தொகுப்பில் வேறுபாடுகள் உள்ளன.<br>எனினும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை அமுல்ப்படுத்தப்பட்ட பின்னர் பழைய தரப்படுத்தல் இடைநிறுத்தப்பட்டது. 2016.04.25 இல் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய பழைய தரப்படுத்தல் இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக மேலே குறிப்பிட்டவாறு ஊழியர்களின் வேறுபாடுகள் எதிர்கால தரப்படுத்தலில் ஏற்படமாட்டாது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் பதவிகளிற்கு ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 ஆண்டறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்ட நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டல் கையேட்டின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டறிக்கைகள் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் 150 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் | கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை வெகுசன ஊடக அமைச்சுக்கு அனுப்பப்பட்டது. எனினும் 2020 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை இன்னும் அச்சிடப்பட்டு வருகிறது. | காலதாமதமின்றி ஆண்டறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

2022 யூன் 29 வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் 2021 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2022 ஆகஸ்ட் வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பொறியியல் பிரிவின் 19 செயற்திட்டங்கள், நிர்வாகப் பிரிவின் 2 செயற்திட்டங்கள், வெலந்த சேவையின் 2 செயற்பாடுகள், ஆங்கில சேவையின் 1 செயற்பாடு, சிங்கள சுவதேசிய சேவையின் 1 செயற்பாடு, ரஜரட்ட சேவையின் 1 செயற்பாடு மற்றும் கந்துரட்ட சேவையின் 3 செயற்பாடுகள் ஆகியவற்றின் முன்னேற்றம் முன்னேற்ற மீளாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் ஒப்பிடும் போது குறித்த செயற்பாடுகளின் முன்னேற்றத்தை சரிபார்க்க முடியவில்லை. | கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்கப்பட்டுள்ளது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் முன்னேற்றத்தை சரிபார்க்கும் பொருட்டு அத்தகைய செயற்பாடுகளின் முன்னேற்றம் முன்னேற்ற அறிக்கையில் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டிற்காக ஒலி ஆராய்ச்சி பிரிவினால் திட்டமிடப்பட்ட மூன்று செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்காததுடன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காத இசைப் பிரிவு, அபிவிருத்திப் பிரிவு, மத்திய செயற்பாட்டுப் பிரிவு, றுகுணு சேவை, வயம்ப சேவை மற்றும் விளையாட்டுப் பிரிவு தொடர்பான 19 செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. | கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்கப்பட்டுள்ளது. நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக இந்த செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவது கடினமாக உள்ளது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தை சரியாக தயாரிப்பதற்கும், செயற்பாட்டின் போது திட்டத்தை பின்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |